விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 073 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 18 வியாழக்கிழமை (02.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### யாழ்.மாநகர சபையின்
## புதிய முதல்வர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி
### விரைவில் வர்த்தமானி

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாநகர சபையின் புதிய முதல்வர் தெரிவு எதிர் வரும் 10ஆம் திகதி நடை பெறவுள்ளது.

வடமாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட முதல்வர் இ.ஆனல்ட் இரண்டு முறை வரவு செலவுத் திட் டத்தை சமர்ப்பித்த 11

## காலி முகத்திடல் போராட்டத்தில் விடுதலைப் புலிகளும் பங்கேற்பு
### புரளியைக் கிளப்பினார் திசாநாயக்க

(கொழும்பு)
காலி முகத்திடலில் அர சாங்கத்திற்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத் தில் தமிழீழ விடுதலைப் புலி களின் உறுப்பினர்களும் பங் கேற்றிருந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியில் இடம் பெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே பாராளு மன்ற உறுப்பினர் எஸ்.பி.திசா நாயக்க இதனைத் தெரிவித்தார். 11



### நாடளாவிய ரீதியில்
# தொழிற்சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பு
### முக்கிய சேவைகள் முடங்கின



(கொழும்பு) நியாயமற்ற வரிக்கொள்கை, வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு, சம்பளம் மற்றும் கொடுப்பனவு அதிகரிக்கப்படாமை உள்ளிட்ட விடயங்களை முன்வைத்து பல துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் நேற்று பணிப் பகிஷ் கரிப்பில் ஈடுபட்டன. (11ஆம் பக்கம் பார்க்க)

### 50 ரூபாயினால்
## மண்ணெண்ணெய் விலை குறைப்பு

(கொழும்பு)
மண்ணெண்ணெய் விலை 50 ரூபாயினால் குறைப்பட்டுள்ளது,
இதற்கமைய ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 305 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட வுள்ளது. 11

### கிளாலி பகுதியில்
## குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் பலி

(முறிகண்டி)
கிளாலி பகுதியில் குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.
குறித்த சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் உள்ள தாமரைக்குளத் தில் குறித்த நபரின் சடலம் மீட்கப்பட் 11

## கோப்பாயில் வீதி விபத்து
### இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)
கோப்பாயில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.
இதில் நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த இரத் தினேஸ்வரன் பாவி தான் (வயது-23) என் 11

## இந்தியாவில் அதிர்ந்தால் இலங்கையையும் பாதிக்கும்
### நிலநடுக்கம் தொடர்பில் எச்சரிக்கை

(கொழும்பு)
இந்தியாவில் நிலநடுக்கம் ஏற்பட்டால் அது இலங்கை யில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என மீண்டும் எச் சரிக்கை விடப்பட்டுள்ளது.
ஹிமாச்சல் - உத்தர காண்ட மாநிலங்களில் எதிர வரும் வாரத்தில் 8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற் பட வாய்ப்புள்ளதாக இந் திய நிலநடுக்கவியல் ஆய்வு நிறுவனம் எச்சரித் துள்ளது. 11

## உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைப்புக்கு எதிராக
### 9, 10ஆம் திகதிகளில் விவாதம்

(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர் தல் பிற்போடப்பட்டமை தொடர் பில் பல தரப்பினரும் கடுமை யான எதிர்ப்பினை வெளியிட் டுள்ள நிலையில், உள்ளூ ராட்சித் தேர்தலை ஒத்திவைப் பது தொடர்பான விவாதம் நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு நேற்று தீர்மானித்துள்ளது.
அந்தவகையில், எதிர் வரும் 9ம் மற்றும் 10ம் திகதிகளில் இரண்டு 11



ஓம் சக்தி
அன்னையின் 83வது அவதார பெருமங்கள விழா
03.03.2023
மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றம் கிளானை, அல்வாய்.
மேல்மருவத்தூர் ஆன்மீக குரு அருள்திரு பங்காரு அம்மா அவர்களின் 83வது அவதாரத் திருநாள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (03.03.2023) கிளானை மேல்மருவத்தூர் வழிபாட்டு மன்றத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. சிறப்பு பூசையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.
அனைவரும் வருக! அன்னையின் அருள் பெறுக!!
விழா அனுசரணை:- சக்தி ஹேமா சதீஸ்காந் ஓம் சக்தி! இங்ஙனம்:- ஆலய நிர்வாகம் | 0773017914
(C-6081)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைநகர் வலந்தலை மடத்துக்கரை

அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தான

## சப்பற வெள்ளோட்டம்



வழிக்கரை அம்மனே போற்றி!

காரைநகர் நுழைவாயிலான மடத்துக்கரையில் அமைந்து அனைத்து மக்களுக்கும் அவர்களின் துன்பம் துயரங்கள் அனைத்தும் போக்கி பாதுகாத்து வழிக்கரை தெய்வமாகவும் அகிலாண்டேஸ்வரி தாயாக வும் இருப்பவளே அனைவருக்கும் நல்லாசி கிடைக்க அன்னை மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அருள் புரிய வேண்டுகிறேன் சப்பற தேர் இனிதே வெள்ளோட்டம் நடைபெற லோகநாயகன் திண்ண புரத்தான் சிவபெருமான் துணை புரிவாராக.



**வீரமுத்து கண்ணன்.**
அம்பிகை அடியவன்.
பிரதேசசபை உறுப்பினர்.
(அமைப்பாளர் - ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, காரைநகர் பிரதேசம்)

(C-6092)

# யாழ். நகரில் வாகன நெரிசலை தடுப்பது தொடர்பில்

## வர்த்தக சங்க பிரதிநிதிகளுடன் பொலிஸார் கலந்துரையாடல்

யாழ் நகரப் பகுதிகளில் வாகன நெரிசலை தடுப்பதற்கும் வாகனங்களை நிறுத்துவதற்கும் உரிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் எம்.ஆர். மஞ்சுள செனரத்துடன் யாழ். வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் யாழ். பொலிஸ் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில், யாழ் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் முறையற்ற விதத்தில் வாகனங்கள் நிறுத்தப்படுவ தால் வர்த்தகர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக வர்த்தக சங்கப் பிரதிநிதிகளால் பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் நகர அபிவிருத்தி அமைச் சினால் பெருந்தொகை செலவில் அமைக் கப்பட்ட வாகன தரிப்பிடம் இருக்கும் நிலையில் அதனை செயல்படுத்துவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண் டும் எனவும் கோரிக்கை முன்வைத் தனர்.

இதன்பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வணிகர் கழக தலைவர் ஜெயசேகரம், யாழ் நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வாகன தரிப்பிடத்தில் மேலதிக வாகனங்களை நிறுத்துவதற்கு பொலிஸாரின் உதவியை நாடியுள்ளோம்.

குறித்த வாகன தரிப்பிடத்தில் நீர் வசதிகள் மலசலகூட வசதிகள் ஏற்படுத் தப்பட்டுள்ள நிலையில் தூர இடங்களில் இருந்து வருகை தரும் வாகனங்கள் தரித்துச் செல்வதற்கு வசதியாக இருக்கும்.

ஒரு மணித்தியாலத்திற்கு உட்பட்டு நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஆட்டோக்களுக்கு எவ்விதமான கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது.

அதற்கு மேலதிகமாக நிறுத்தப்படும் மணித்தியாலங்களுக்கு குறைந்த கட்டணத்தை அறவிட எண்ணியுள்ள நிலையில் அதன் விவரங்கள் தொடர்பில் ஊடகங்களில்வெளிப்படுத்தப்படும்.

ஆகவே யாழ் நகரப் பகுதியில் வாகன நெரிசல்களை குறைப்பதற்கு பாதுகாப்பான வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்து வதற்கு அனைத்து தரப்பினரும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றார். (ம-7,33,104)

## வியாழனும் வெள்ளியும் வானில் இணையும் அற்புத நிகழ்வு இன்று

வியாழனும் வெள்ளியும் வானத்தில் ஒரே நேர்கோட்டில் சந்தித்து, கிட்டதட்ட ஒன்றை ஒன்று தொட்டுவிடுவது போல காட்சியளிக்கும் நிகழ்வு இன்று மாலை நடைபெறவுள்ளது.

சூரிய குடும்ப கோள்களில் மிகப் பெரியதான வியாழன் (ஜுப்பிடர்), பிரகாச மானதான வெள்ளி (வீனஸ்) ஆகிய கோள்கள் இணைந்து ஒன்றை ஒன்று தொட்டுவிடுவது போல காட்சியளிக்கும் என நாசா தெரிவித்துள்ளது.

இலங்கையில்இன்று மாலை சூரிய அஸ் தமனத்தின் பின் 6.30-8.00 மணி வரை யிலான காலப்பகுதியில் தென் மேற்கு திசையில் அவதானிக்கலாம் என வானி யலாளர்கள் தெரிவித்துள்ளனர்.(ம-7,104)

## மரண அறிவித்தல்



தோற்றம்
20 - 02 - 1941

மறைவு
01 - 03 - 2023

### செல்வராசா பராசக்தி (மனோரஞ்சிதமலர்)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா பராசக்தி அவர்கள் நேற்று (01.03.2023) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகமுத்து தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தவலிங்கம் காலஞ்சென்ற வசந்தரூபன், காலஞ்சென்ற சற்குணபாலன் மற்றும் குணபாலன், யோகேஸ்வரி(கவிதா)(பிரதேச வைத்தியசாலை - மண்டைதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புச் சகோதரியும் சிவானந்தி, வரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் பவியின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக 12 மணியளவில் அஞ்சலிக்காக S.இன்பம் மலர்ச்சாலையில் (மானிப்பாய் வீதி, ஒட்டு மடம்) வைக்கப்பட்டு இன்று 02.03.2023 வியாழக்கிழமை 2 மணியள வில் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
1ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி

தொடர்புகளுக்கு:
077 958 7261
077 191 2029

(14772)


## தேவை

காலியில் உள்ள கோவில் ஒன்றுக்கு கணக்குப்பிள்ளை மற்றும் உதவியாளர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

(C-6090)

077 349 3062
071 133 1133


## பேருந்தில் கஞ்சா; சந்தேகநபர் கைது

பேருந்தில் கஞ்சாவினை எடுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அனலைதீவு பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர் காரைநகர் - மன்னார் அரச பேருந்தில் 4 கிலோ கஞ்சாவினை எடுத்துச் செல்லும் வேளை சங்குப்பிட்டி பகுதியில் வைத்து இவ்வாறு கைது செய் யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்மேல திக விசாரணைக ளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின் றனர். (ம-7,104)


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 69 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் மட்டும்
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14771)

076 465 0171, 076 911 9371

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். (C-6088)

யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஐ முழுமையாக நிறைவேற்றுங்கள்

# அதன் பின்னரே பேச்சுவார்த்தை

# ஒரே குரலில் வலியுறுத்துங்கள்

## வடக்கு-கிழக்கு அரசியல் தலைவர்களிடம் மனோ இடித்துரைப்பு



(கொழும்பு)

**வடக்கு, கிழக்கில் வாழும் மக்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் அரசியல் தலைவர்கள் ஒரே குரலில் மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் வடக்கு, கிழக்கு அரசியல் நிலவரம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற மாகாண சபை உள்ளிட்ட அதிகாரங்கள் அனைத்தையும் முதலில் முழுமையாக நடைமுறைப்படுத்திவிட்டு தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான பேச்சுவார்த்தை மேசைக்கு வாருங்கள், நாங்கள் பேசத் தயாராக இருக்கின்றோம் என்ற விடயத்தை ஒரே குரலில் வடக்கு, கிழக்கு அரசியல் தலைவர்கள் அரசிடம் வலியுறுத்த வேண்டும்" என்றும் மனோ கணேசன் இடித்துரைத்துள்ளார். அரசியல் கட்சிகளின் இறுதி இலக்கு வேறாக இருந்தாலும், ஆரம்பப் பயணம் ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (நி)

# இலங்கையின் கடன் சுமையை குறைப்பதற்கு சீனா தயார்

## சீன வெளிவிவகார அமைச்சு



(கொழும்பு)

இலங்கை நிலைமையை ஆராய்ந்து அதன் கடன் சுமை யைக் குறைப்பதற்கும் நிலையான அபிவிருத்தியை அடைய வழி வகை செய்வதற்கும் சீனா தயாராக உள்ளதாக வெளி விவகார அமைச்சின் பேச்சா ளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு உத வுவதில் சாதகமான பங்கை வகிப்பதற்காக தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவோம் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடுமையான கடன் சுமையை தணிக்க தமது நாடு முக்கியத்துவம் வழங்கும் என்றும் அந்த நாடுகளின் வளர்ச்சிக்கு தீவிர பங்களிப்பை சீனா வழங்கும்.

இதேவேளை ஜி-20 கட்ட மைப்பின் கீழ், கடன் நிவாரண முயற்சிகளில் தீவிரமாக பங்கேற்று ஒத்துழைப்பு வழங்குவதாகவும் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார். (நி)

# வலிப்பு நோயாளர்களின் உயிருக்கு

## பாரிய ஆபத்து-மருத்துவ நிபுணர் தகவல்

(கொழும்பு)

வலிப்பு நோயாளர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இந்நிலைமை வலிப்பு நோயாளர்களின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் எனவும் விசேட மருத்துவ நிபுணர் கிரிஷான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் வலிப்பு நோயாளர்களின் எண்ணிக்கை 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் இற்கும் அதிகமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# அரிசி விலை குறையும் சாத்தியம்

(கொழும்பு)

அரிசியின் விலைகள் குறிப் பிடத்தக்களவு குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நெல் கொள்வனவு செய்யும் போது விதிக்கப்படும் சமூகப் பாதுகாப்பு வரி நீக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நெல் கொள்வனவின் போது 2.5 வீதம் சமூகப் பாதுகாப்பு வரி அறவீடு செய்யப்பட்டு வந்துள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகை யில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க சமர்ப்பித்த அமைச்ச ரவை பத்திரத்திற்கு அமைய இந்த வரி நீக்கப்பட்டுள்ளது.

இந்த வரி நீக்கத்தின் அடிப் படையில் சந்தையில் அரிசி விலையில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விவசாயிகளுக்கு நெல்லுக்கான கூடுதல் விலையையும் நுகர்வோருக்கு அரிசிக்கான குறைந்த விலையையும் உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (நி)

# நலன்புரி உதவிகளைப் பெற இம்மாத இறுதிவரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

சமுர்த்தி கொடுப்பனவு உள்ளிட்ட நலன்புரி உதவிகளை பெற்றுக் கொள்வதற்கான விபரங்களை பதிவு செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே குறித்த காலப்பகுதிக்குள் தகுதியானவர்களை விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# மரண அறிவித்தல்

## பொன்னப்பா சரவணமுத்து (மூத்ததம்பி)

**முன்னாள் மணல் தோட்டக் கணக்கர்**



மலர்வு: 18.04.1927 - உதிர்வு: 28.02.2023

புலோப்பளை பளையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது பளை நகரத்தில் வசித்து வந்தவருமான பொன்னப்பா சரவணமுத்து அவர்கள் 28.02.2023 ஆம் திகதி இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னார் காலஞ்சென்ற பொன்னப்பா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, கனகசபை, சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியவர்களின் பாசமிகு சகோதரனும், பரமேஸ்வரி (புலோப்பளை), சதாசிவம் (லண்டன்), செல்வராசா (தர்மக்கேணி), கோபாலகிருஸ்ணன் (மிருசுவில்), செல்வரத்தினம்(லண்டன்), சிவனேஸ்வரி(வரணி), முரளீதரன் (பளை நகரம்), தனபாலன் (லண்டன்), சறோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்புரமணியம், கமலகுமாரி, சுதாஜினி, கமலினி, கமலேஸ்வரி, கனகரத்தினம், ரேவதி, அனுஷா, காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் மாமனாரும், சிவகுமார், காலஞ்சென்ற சந்திரகுமார், கவிதா, பிருந்தா, சிந்துஜா, துவாரகா, கீர்த்தனா, தீபா, கௌசிகா, கிருசிகா, பத்மாசனன், கனிச்செல்வி, பாமினி, தயாளினி, சாகித்தியா, காருணிகா, சாருஷா, மோகனன், லிகிர்தன், சுபா, குகராம், கேசிகன், அபி, சகானா, கபினா, கோபினா ஆகியோரின் அன்புப் பேரனும், அபிசாருதன், ரதுஷா, யமிஷா, நேயன், அகன், திரனா, சஞ்சனா, ஆரன், ஆரியன், ஆருஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.03.2023 ஆம் திகதி இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பி.ப 2.00 மணியளவில் புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்.

பளை நகரம், பளை.

(சி-6085)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வீரர்களின் போர்’ நாளை ஆரம்பம்



“வீரர்களின் போர்” என அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிகள் இடையிலான கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

மார்ச் 3,4 என இரண்டு தினங்கள் நடைபெறும் போட்டியானது இரு கல்லூரிகளின் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் தொடர்பாக பங்கேற்கும் அணிகளின் அறிமுக நிகழ்வும் ஊடக சந்திப்பும் நேற்று முன்தினம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது கல்லூரி அதிபர்களாலும் இரண்டு அணிகளின் தலைவர்களாலும் வெற்றிக் கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் எம்.செல்வஸ்தன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் எம்.மணிசேகரன், அணித் தலைவர்கள், பயிற்றுவிப்பாளர்கள் என்போர் கலந்து கொண்டனர்.

21 ஆவது வருடமாக நடைபெறும் குறித்த போட்டி 11 தடவை சமநிலையில் முடிந்ததுடன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஐந்து தடவையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நான்கு தடவையும் வெற்றி பெற்றுள்ளது.

இம்முறை சசிகுமார் கஜித் தலைமையில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் ஜெயகாந்தன் கௌரி சங்கர் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் களமிறங்கவுள்ளன.(4-6-33)

# 109 ஓட்டங்களில் சுருண்டது இந்திய அணி


அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்டில் இந்திய அணி 109 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று இந்திய அணி முதலில் துடுப்பாடியது.

கடந்த போட்டியில் அறிமுகமான அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் குணமென் தனது தாக்குதலை ஆறாவது ஓவரில் தொடங்கினார். அவரது மாயாஜால சுழலில் கப்டன் ரோகித் சர்மா (12), சுப்மன் கில் ஆகியோர் வெளியேறினர்.

அதன் பின்னர் களமிறங்கிய புஜாரா ஒரு ஓட்டத்தில் லயன் பந்துவீச்சில் அவுட் ஆனார். அவரைத் தொடர்ந்து ஜடேஜாவும் 4 ஓட்டங்களில் வெளியேறி ஏமாற்றம் அளித்தார். சிறிது நேரம் தாக்குப்பிடித்த கோலி 22 ஓட்டங்களிலும், ஸ்ரீகர் பரத் 17 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

கடைசி விக்கெட்டாக சிராஜ் ரன் அவுட் ஆக, இந்திய அணி 109 ஓட்டங்களுக்கு சுருண்டது. அவுஸ்திரேலியாவின் குணமென் 5 விக்கெட்டுகளும், லயன் 3 விக்கெட்டுகளும், மர்பி ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். (4)



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 116







“வழியில் கடம்பூர் சம்புவரையர் வீட்டில் ஒருநாள் இரவு தங்கியிருந்தேன். அங்கேதான் பார்க்க நேர்ந்தது. இந்த மோதிரத்தையும் அவர்தான் கொடுத்தனுப்பினார்”

“ஆகா! இதை நீ ஏன் முன்னமே சொல்லவில்லை? கடம்பூரில் இரவு நீ தங்கியிருந்தாயா? இன்னும் யார் யார் வந்திருந்தார்கள்?”

“மழநாடு, நடுநாடு, திருமுனைப்பாடி நாடுகளிலிருந்து பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள்”

“இரு, இரு! பிறகு சாவகாச மாகக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் நீயே இந்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்து விட்டு வா! அப்புறம் தமிழ்ப் புலவர்கள் வந்து விடுவார்கள். வளவளவென்று பேசிக் கொண்டிருப்பார்கள். இந்தப் பிள்ளையைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போ!” என்று அருகில் நின்ற வீரன் ஒருவனுக்குச் சின்னப் பழுவேட்டரையர் கட்டளையிட்டார்.

அந்த வீரனைத் தொடர்ந்து வந்தியத்தேவன் மேலும் அரண்மனையின் உட்புறத்தை நோக்கிச் சென்றான்.

மூன்று பக்கங்களில் அலைகடல் முழக்கம் கேட்கும்படியாகப் பரந்திருந்த சோழ சாம்ராஜ்யத்தின் சிங்காசனம் சில காலமாக நோய்ப் படுக்கையாக மாறியிருந்தது. அந்தச் சிம்மாசனத்தில் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி சாய்ந்து படுத்திருந்தார்.

இராஜ்யாதிகாரங்களையெல்லாம் மற்றவர்களிடம் ஒப்படைத்து விட்டு, மருத்துவ சிகிச்சை செய்து கொண்டிருந்தாராயினும் சிற்சில முக்கியமான சந்தர்ப்பங்களில் முக்கியமான மனிதர்களுக்கு அவர் தரிசனம் அளித்தே தீர வேண்டியிருந்தது.

அமைச்சர்களும் தளபதிகளும் வேளக்காரப் படை வீரர்களும் அவரைத் தினந்தோறும் வந்து தரிசித்து விட்டுப் போவது இராஜ்யத்தின் நன்மைக்கு அவசியமாயிருந்தது.

எத்தனையோ போர் முனைகளில் செயற்கரும் வீரச் செயல்கள் புரிந்து அசகாய சூரர் என்று பெயர் பெற்றவரும் நாடு நகரமெல்லாம் ‘சுந்தர சோழர்’ என்று அழைக்கப்பட்டவரும் அழகில் மன்மதனுக்கு ஒப்பானவர் என்று புகழ் பெற்றவருமான சக்கரவர்த்தியின் நோய்ப்பட்டு மெலிந்த தோற்றத்தைக் கண்டதும் வந்தியத்தேவனால் பேசவே முடியாமற் போய் விட்டது. அவனுடைய கண்களில் நீர் ததும்பியது. அருகில் சென்று அடிபணிந்து வணங்கிப் பயபக்தியுடன் ஓலையை நீட்டினான்.

சக்கரவர்த்தி ஓலையை வாங்கிக் கொண்டே, “எங்கிருந்து வந்தாய்? யாருடைய ஓலை?” என்று ஈனஸ் வரத்தில் கேட்டார்.

“பிரபு! காஞ்சியிலிருந்து வந்தேன். இளவரசர் ஆதித்தர் தந்த ஓலை!” என்று வந்தியத்தேவன் நாத் தழுத முக்கக் கூறினான்.

சக்கரவர்த்தியின் முகம் உடனே பிரகாசம் அடைந்தது. அவர் அருகில் திருக்கோவலூர் மலையமான் புதல்வியான சக்கரவர்த்தினி வானமாதேவி வீற்றிருந்தாள். அவளைப் பார்த்து, “தேவி! உன் புதல்வனிடமிருந்து ஓலை வந்திருக்கிறது!” என்று சொல்லிவிட்டுப் படித்தார்.

“ஆகா! இளவரசன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். நீயும் நானும் அங்கு வந்து சில நாள் தங்கியிருக்க வேண்டுமாம்!” என்று சொல்லிய போதே, சக்கரவர்த்தியின் முகம் முன்னை விடச் சுருங்கியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருட்கள் உள்ள இடங்களில் சட்டவிரோத மணல் அகழ்வு

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நில கண்ணிவெடிகள் மற் றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படும் பிரதேசங்களுக்கு அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் என அப்பகுதி மக்கள் கோரி க்கை விடுத்துள்ளனர்

முகமாலை பகுதியில் நில கண் ணிவெடிகள் மற்றும் அபாயகரமான வெடிபொருட்கள் காணப்படுகின்றன.

அப்பகுதிக்குள் சட்டவிரோதமான முறையில் உள்நுழையும் மணல் கொள்ளையர்கள் தனியார் காணிகளுக்குள் நுழைந்து மணல் அகழ்வுகளில் ஈடுபடுகின்றனர். அதனால் வெடிபொருள் அபாயத்தினால் விடுவிக்கப்படாத தனியார் காணிகளுக்குள் மணல் அகழ்வதினால் காணிகளுக்குள் பாரிய அளவினாலான பள்ளங்கள் காணப்படுகின்றன.

அதேவேளை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களால் , வெடிபொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபடும் போது வெடிபொருட்கள் ஏதேனும் வெடித்தால் மணல் அகழ்வில் ஈடுபடுபவர்கள் அவயங்களை இழக்க வேண்டி ஏற்படும். சில வேளைகளில் உயிரை இழக்க வேண்டி ஏற்படும். எனவே அபாயகரமான பகுதிகளுக்குள் ஊடுருவி மணல் அகழ்வில் ஈடுபடுபவர்களை கட்டுப்படுத்த உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (4-6-33)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 3 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் வி.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். இளங்கோ தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

(யாழ்ப்பாணம்)

வட்டு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பதில் அதிபர் திருமதி வ.தில்லைச் செல்வன்தலைமையில்நடைபெறவுள்ளது. (4)

## பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சை 18 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை (GIT) 2019,2020,2021, 2022(2023) யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என பாடசாலை அதிபர் திருமதி. இ.முத்துகுமாரன் அறிவித்துள்ளார். (4)

## கலைமலர் சஞ்சிகை இருப்பின் நூலகத்திற்கு வழங்கி உதவுங்கள்

### கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் லலீசன்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து வெளியிட ப்பட்ட கலைமலர் சஞ்சிகையின் பிரதிகள் இருப்பின் கலாசாலை நூலகத்திற்கு வழங்கி உதவு மாறு கலாசாலை அதிபர் ச.லலீசன் கோரியுள்ளார்.

கலாசாலை நூற்றாண்டைக் காணும் தருணத்தில் கலாசாலையுடன் தொடர்புடைய வெளியீடுகளை ஆவணப்படுத்தும் நோக்கில் இந்த உதவியை மேற்கொள்ளுமாறு கலாசாலையில் கற்ற முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் அதிபர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

1923 இற்கும் 1974 இற்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பற்றிய தரவுகளோ அல்லது நூல்களோ கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் அத்துடன் கலைமலர் 18, கலைமலர் 19 (1977 - 1978), கலைமலர் 22 (1981), கலைமலர் 28, கலை மலர் 29, கலைமலர் 30 (1990 - 1998 இடையில்), கலைமலர் 34 (2002) ஆகிய கலைமலர் சஞ்சிகைகள் கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர் இந்தப் பிரதிகள் எங்காவது இருப்பின் கலாசாலைக்கு (021 223 0323 என்ற இலக்கத்திற்கு) அறியத் தந்தால் அவற்றை வந்து பெற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (4-6-33)

## கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

### யாழ்.மாவட்ட செயலாளர்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவானது யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கை கடற்படை,நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் நாளை 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேலும், கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான மார்ச் 3 ஆம் திகதிய இரவு உணவு, மார்ச் 4 ஆம் திகதிய காலை உணவு மற்றும் மீள் பயணத்திற்கான சிற்றுண்டி என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மேலும் தெரிவித்தார்.(4-6-33)

## இராசிபலன்

02.03.2023
மாசி 18, வியாழக்கிழமை
தசமி முற்பகல் 9.32 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 3.14 மணிவரை
சுபநேரம் 7.57-9.27 மணிவரை
இராகுகாலம் 1.57-3.27 மணிவரை

சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

வளவன்


மேஷம்

கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.


ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மிதுனம்

நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம்.


கடகம்

அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் அமையும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


சிம்மம்

அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கன்னி

தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், திறமைகள். வெளிப்படும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், தூரதேசச் செய்திகள் அனுகூலம் தரும்.


துலாம்

தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள்,விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

வரவும் செலவும் சமமாகும் நாள், குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்,உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


தனுசு

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரும்.


மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்,போசன சுகமுண்டு.


கும்பம்

பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.


மீனம்

வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும்.

ஆண்டவனை அடைவதற்கு மிக விரைவான பாதை அன்புப் பாதையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் வலந்த
## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள்



### ஆதீனகுருவின் ஆசிச்செய்தி

எமது ஊரின் முகவாயிலில் ஆலமர தல விருட்சமாகக் கொண்டு மூர்த்தி. தலம். தீர்த்தம் என்னும் பெருமைகளோடும் தம்மை நாடி வரும் அடியவர்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் கருணை மழை பொழிந்து அருளாட்சி புரிந்து கொண்டு விளங்கும் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் ஆலயம். முன்பு சிறிய ஆலயமாக விளங்கியது.

கடந்த 2011 ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு. அம்பாள் மீது அன்பும் பக்தியும் உடைய அடியவர்களின் நிதிப் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் 2014 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம். 2015 ஆம் ஆண்டு முதலாவது பிரம்மோற்சவம். 2016 ஆம் ஆண்டு தேர் வெள்ளோட்டம். 2017 ஆம் ஆண்டு தேர்த் தரிப்பிட கும்பாபிஷேகம். 2018 ஆம் ஆண்டு இராஜகோபுர கும்பாபிஷேகம் போன்ற திருப்பணிக் கைங்கரியங்கள் நிறைவடைந்து அம்பாளின் அளப்பெரும் கருணையினால் அடியவர்கள் நாங்கள் எல்லோரும் கண்டு மகிழ்வடைந்தோம்.

இவ்வருடம் அம்பாளின் மீது மிகுந்த நம்பிக்கையும் அன்பும் பக்தியும் உடைய மருதடியைச் சேர்ந்த அமரர் ஒப்பிலாமணி. வள்ளியம்மை நினைவாக அவர்தம் குடும்பத்தினர் சார்பில் மனோரஞ்சிதம் அவர்தம் புதல்வர் தர்ஷன் குடும்பத்தின் பூரண நிதிப் பங்களிப்பில் எமது ஆலய ஆஸ்தான ஆசாரியார் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ ச.விஜயரத்தினம் குழுவினரின் கைவண்ணத்தில் அழகு பொருத்தி சப்பைரதம் என்று சொல்லப்படும் (ஷகோபுரதரிசனம்) சப்பறம் தரிப்பிடம் அமையப் பெற்று இன்று வெள்ளோட்டம் நடைபெறுவது மிகவும் மகிழ்ச்சி யளிக்கின்றது. இவ்விழாவில் பங்குகொண்ட உபயகாரர்கள். அடியவர்கள். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து ஆசிகூறுகின்றோம்.

லோகாசமஸ்த்தா சுகினோபவந்து.

**பிரம்ம ஸ்ரீ கு.சரவணபவானந்தசர்மா,**
**ஆதீன குரு.நம்பிக்கை பொறுப்பாளர்,**
**மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்,**
**வலந்தலை, காரைநகர்.**



### மஹோற்சவ குருவின் ஆசிச் செய்தி

சைவமும் தழைத்து ஓங்கும் காரை மாநகரின் முகவாயில் எழுந்தருளி தன்னை நாடிவரும் பக்தர்களுக்கு திருவருள் பொழிந்து அருளாட்சி புரியும் எங்கள் அன்னையாம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இன்று புதிய சப்பறம் (ஷகோபுரதரிசனம்) வெள்ளோட்டம் காணுதல் மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அந்தவகையில் அம்பிகையின் ஆலயத்தில் இத்தகைய உன்னதமான திருப்பணியைச் செய்து தந்த உபயகாரர்களுக்கும் இதனை சிறப்பாக உருவாக்கிய ஆசாரியார் திரு.ச.விஜயரத்தினம் குழுவினருக்கும் வாழ்த்துக்களும் நல்லாசிகளும் கூறுவதுடன் அடியவர்கள் அனைவருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்க பிரார்த்தனை செய்து ஆசி கூறுகின்றோம்.

லோகாசமஸ்த்தா சுகினோபவந்து.

**சிவஸ்ரீ.கு.சண்முகராசக்குருக்கள்,**
**மஹோற்சவ பிரதமகுரு.**



### "கேட்காமலே வரம் அருளும் அம்பாள்"

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்பார்கள். மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளை மனம் ஒன்றி நம்பிக்கையோடு வழிபாடு செய்து வந்தால் கேட்காமலே வரம் அருளும் அம்பிகையின் மகிமையை வாயால் வர்ணிக்கவே முடியாது. "வழிக்கரை அம்மன்" என்று காரைநகர் மக்கள் அனைவராலும் போற்றித் துதிக்கின்ற எங்கள் குலதெய்வமான அம்பாளுக்கு இன்று புதிய சப்பைரத வெள்ளோட்ட விழா நடைபெறுவது மெய்சிலிர்க்க வைக்கிறது.

இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக இன்றைய ஆதீனகுரு அவர்களின் தந்தையார் பிரம்மஸ்ரீ குகநேச சர்மா அவர்களால் இரண்டு கால பூஜை வழிபாடுகள் செய்யப்பட்டு மிகச் சிறிய ஆலயமாக இருந்த காலத்தில் 'மானம்பூ' திருவிழாவை எமது தந்தையார் பற்றுறுதியோடு நடத்தி வந்தமையாலோ என்னவோ அம்பிகைக்கும் எமக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது.

இன்றைய சப்பறத் திருவிழா உபயகாரரின் தந்தையார் அமரர் ஒப்பிலாமணி அவர்களின் தேநீர்ச் சாலைக்கு நான் சிறுவனாக இருந்த போது (1970களில்) பால் கொண்டு செல்வது வழக்கம். காலையில் கடை திறந்ததும் தோசை. இடியப்பம் என்பவற்றை காக்கைகளுக்கு விருந்தளிப்பார். நூற்றுக்கணக்கான காக்கைகள் வந்து உண்டு மகிழ்வதைக் கண்டு வியந்திருக்கிறேன். "காக்கை குருவி எங்கள் ஜாதி நந்தலாலா" என்று பாரதியார் பாடியிருக்கிறார். "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்" ஒப்பிலாமணி அவர்களின் பண்புதான் இன்று அவரது பிள்ளைகளை நல்ல நிலையில் வைத்து அம்பிகைக்கு புதிய சப்பறத் திருவிழா காண வைத்தது எனலாம். இன்றைய ஆதீன குரு பூசை செய்ய வந்த ஆரம்ப காலங்களில் பஞ்ச ஆரத்தி. தீர்த்தக் கிண்ணம். பூக்கள் போன்ற பூசைப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தட்டம் கூட இல்லாமல் இருந்த நிலையையும் இன்று இராஜகோபுரம். மணிமண்டபம். தேர். தேர் முட்டி. வாகனங்கள். குடை. கொடி. ஆலவட்டம். அலங்காரப் பொருட்கள் என்று அத்தனையையும் சிவதர்ம கொடை வள்ளல்கள் வாயிலாகப் பெற்று செழிப்பும் வளமும் மிக்க ஆலயமாக வளர்ச்சி பெற்று எம்மையும் சீரும் சிறப்புமாக வாழ வழிகாட்டி அருள்பாலித்து வரும் அம்பாளின் இன்றைய புதிய சப்பறத் வெள்ளோட்ட விழா சிறப்புற. அம்பாளை மனதிருத்தி ஈழத்துச் சிதம்பர திண்ணபுரத்து தில்லைக் கூத்தனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

**"சித்தாந்தரத்தினம்"**
**நடராசா கணேசமூர்த்தி,**
**ஆசிரியர் ஊடகவியலாளர், மொந்திபுலம், காரைநகர்.**

(சி-6086)



### வாரீர் வரம் பெற

காரைநகரின் நுழைவாயிலில் வலந்தலை மடத்துக்கரையில் படைத்தல் கடவுள் பிரமனே ஆலமரமாக அவதாரம் எடுக்க காக்கும் கடவுள் விஷ்ணு ஆலமர இலையில் பள்ளிகொள்ள. அந்த ஆலமரத்தின் கீழ் அமர்ந்து அருள்பொழிந்து காட்சி தருகின்றாள் மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்பாள்.

பால் தருகின்ற கோவிற் பசுக்கள். மணிக்கு மணி அம்பாளை போற்றும் முக்கடிகார ஒலி. இசைக்கப்படும் தேவார திருவாசகங்கள். பூசைகள். அபிஷேகங்கள். பிரம்மோற்சவங்கள். அன்னதானங்கள் இவையெல்லாம் இக்கோவிலின் மகத்துவங்கள்.

இங்கே புன்சிரிப்புடன் காட்சி தரும் அம்பாளை. காண்டீபம் போல் வளைந்து மனமுருகிக் கையெடுத்துக் கும்பிட்டால் கேட்ட வரங்களை அள்ளி. அள்ளித் தருவாள். மாங்கல்யம். மக்கட்பேறு சோதனைகள். வேதனைகள். தீராத நோய்கள். மனக்குறைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைப்பதோடு அற்புதங்கள் பலவும் புரிகின்றாள்.

இக்கோயில் திருப்பணியில் இமாலய வெற்றி கண்டுவிட்டது. இதற்குக் காரணம் "வேதாகம வேந்தர்" "சிந்தனைச் செம்மல்" பிரம்ம ஸ்ரீசரவணபவானந்த சர்மாவினதும் அவர்தம் பத்தினி ஆனந்தி அம்மாவினதும் பிள்ளைகளினதும் அர்ப்பணிப்பும் பெருமுயற்சியுமே என்றால் மிகையாகாது. திருப்பணிகள் திருவிழா உபயகாரர்களாலும் அடியார்களாலும் தனித்தனி உபயமாக செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் சில நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளன. அந்தவகையில் காரைநகர் மருதடியைச் சேர்ந்த ஒன்பதாம் திருவிழா உபயகாரர் அமரர்கள் ஒப்பிலாமணி. வள்ளியம்மை குடும்பம் நினைவாக அவர்களின் மகள் கணேஸ் மனோரஞ்சிதம் அவரின் புத்திரர் தர்ஷன் குடும்பம் பெரிய சப்பறத்தையும் அதற்கான தரிப்பிடத்தையும் கட்டி உபயம் செய்து இன்று 02.03.2023 வெள்ளோட்டம் காண வைத்துள்ளார்கள். இதனை நிர்மானித்தவர் அம்பாளின் மேல் நிறைந்த பக்தியும் தெளிவும் கொண்ட ஆசாரியார் திரு.ச.விஜயரத்தினம் அவர்களே. இவரின் கைத்திறன் எம்மை பிரமிக்க வைக்கின்றது. அம்பாளின் கீர்த்தியையும் கருணையையும் அவரின் ஞானம் வெளிப்படுத்துகின்றது. இந்த ஆக்கபூர்வமான அரும்பெரும் திருப்பணியை அம்பாளுக்கு உபயம் செய்த கணேஸ் மனோரஞ்சிதம் அவர் தம் புதல்வர் தர்ஷன் குடும்பத்தினரை அம்பிகை அருள் பெற்று வளமுடன் வாழ்கவென வாழ்த்துவோம்.

**ஆ.பாலகிருஷ்ணன்,**
**ஓய்வுநிலை அதிபர் மொந்திபுலம்.**

வே
மிகு
மா
ப
விளங்
பா
செ
சில
ஒப்
உயர்
ஒப்பி
தே
செ
ப
ப
ம

மடத்து
அறிந்து மே
ஆதீனகர்
ஆசாரியா
உபயகார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை மடத்துக்கரை
# ர் தேவஸ்தான சப்பற வெள்ளோட்டம்
## 02.03.2023









### அம்பிகையின் அருள் அனைவர்க்கும் கிடைக்கட்டும்

இலங்கையின் முத்தென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வடபால் வணிகர்களும் செல்வந்தர்களும் ஆச்சார சீலர்களாலும் சைவ பெருமக்களாலும் முத்தமிழ் விற்பன்னர்களும் சிறந்து விளங்கும் காரை மாநகரில் மடத்துக்கரை என்னும் பதியில் கோவில் கொண்டு அருள் புரியும் அகில புவனமாதாவாம் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் பெருவிழாவில் இன்றைய தினம் புதிய சப்பறம் வெள்ளோட்டம் என்பது அகமகிழ்வான விடயம். உபயகாரர்களின் நல்லெண்ணத்தாலும் ஸ்தபதி அவர்களின் நல்முயற்சியாலும் ஆலய தர்மகத்தா அவர்களின் நல்லெழுங்கமைப்பாலும் அழகிய சிற்ப வேலைகள் நிறைந்த கோபுரம் போன்ற அமைப்புடைய சப்பறம் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் ஆலயத்தில் வலம் வருவது நிறைவான புண்ணியங்களை தர வல்லது. சர்வமங்கலம் நிறைந்த இந்நாளில் அம்பிகையின் அருள் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிஷ்டா ரத்தினம்,**
**சிவஸ்ரீ.ச.ஸ்ரீமதுசூதனக்குருக்கள்,**
**மஹா கணபதிபிள்ளையார் கோயில்,**
**சித்தங்கேணி.**

### வாழ்த்துச் செய்தி

மும்மை மாமல மூடிய மூவுயிர்
செம்மை யெய்திச் சிவனடி சேர்ந்திட
இம்மை யம்மை யெழுமையும் காத்தருள்
அம்மை சுந்தரி யானடி சூடுவோம்
-ஈழத்துச் சிதம்பர புராணம்-

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் முப்பொருளுண்மைகளை விளக்குகின்றன. காரைநகரில் வழிக்கரை அம்மன் எனப் போற்றப்படும் மடத்துக் கரை அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியில் அம்பாளின் திருவருளும். ஆலயத்தின் பிரதம குருவான சிவஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா அவர்களின் முயற்சியும் இரண்டறக் கலந்துள்ளன.

சிறியதோர் ஆலயமாக இருந்து பல ஆண்டுகளாக மஹோற்சவம் நடைபெறும் ஆலயமாக திருவருள் பிரபாகித்து நிற்கின்றது. அதன் ஒரு மைல் கல்லாகவே இன்று அம்பாளுக்கு புதிய சப்பறத்திற்கான வெள்ளோட்டம் நடைபெறுகின்றது. அம்பாள் பெரிய சப்பறத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் புரியும் காட்சியை இவ்வாண்டு காண உள்ளோம். எனவே இச் சப்பறத் திருப்பணியை நிறைவேற்ற அனுசரணை யாளர்களாக செயற்பட்ட அமரர் ஒப்பிலாமணி குடும்பத்தினருக்கும். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா அவர்களுக்கும் அம்பாளின் திருவருள் கடாட்சம் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

**வே.முருகமூர்த்தி, ஓய்வுநிலை அதிபர்,**
**செயலாளர், காரைநகர், மணிவாசகர் சபை.**

### விருத்தம்

வேதநெறி தழைத்தோங்கி வாழி! வாழி!
மிகு சைவ துறை வளர்ந்து வாழி! வாழி!
மாதான உமை யம்மை அருளும் வாழி
மடத்துக் கரைத் தாயும் வாழி வாழி!
வேதியராம் சண்முக ராக ரோடு
விளங்கும் சரவண பவானந்தரும் வாழி வாழி
பாதிமதி சடைப் ப்ரமன் அருளும் நல்க
பக்தி மிகு அடியாரும் வாழி! வாழி!

செப்பரிய காரைநகர் வடக்கில் மேவும்
சிவம் பூத்த மடத்துக் கரையில் வதியும்
ஒப்பரிய முத்துமாரித் தாளைப் போற்றும்
உயர் குடியில் வந்துதித்த அன்புத் தொண்டன்
ஒப்பிலா மணி யென்னும் பேர் பூண்டோனை
உளத்திருத்தும் மக்கள் ஒன்று கூடி
செப்பரிய சப்பரம் செய்து தந்தார்.
தேவி அருள் கூட்டிடவே என்றும் வாழி
மங்காத புகழ்மிக்க காரை நாட்டு
மடத்துக் கரையமர் தேவி யாட்கு
சிங்கார மான தொரு சப்பர த்தை
செய்திட்ட மாபெரும் சிற்பக் கலைஞன்
புங்கை நகர் பதியில் பிறந்த அன்பன்
புகழ் பூத்த விஜய ரத்தினப் பேரோன்
மங்காப் புகழோடு என்றும் வாழி!
மாரியம்மை அருளாலே வாழி! வாழி!!

**புலவர்-வே.குமாரசாமி**
**சடையாளி, கரைநகர்.**

### சப்பைரத சான்றோன் விசுவரத்தினம் வாழ்த்துப் பாமாலை

காரை மண்ணில் காக்கும் தாயாய்
கனிவாய் மடத்துக்கரை அமர்ந்து
பாரை நித்தம் பரிபாலிக்கும் தெய்வமே
பத்தினியே எங்கள் மகமாரி
நேரை சரவண பவானந்த சர்மா
நிகழ்த்தும் பூசையில் மகிழும்
தேரை வலமாகும் தேவிக்கு இனிய
தேர்ந்த சப்பைரதம் அமையவே.

விஸ்வ கர்மா விரும்பி ஆற்றும்
விட்டமாய் சட்டம் ஆற்றி
அசுவ லக்கண அருமை நூலிலும்
ஆனதாய அட்டகம் கொண்டு
சப்பை ரதமதை சாற்றிய செம்மலே
விசுவ ரத்தினமே வேந்தனே
அப்பை வடித்தாய் அழகிற்கு அழகாய்
அம்பிகை ரதமே அமையவே

ஒப்பிலா மணியாம் உதயாள் மனோரஞ்
சிதத்து உதித்த எண்ணமே
தப்பிலா எண்ணமாய் தாய்க்கு பணியதை
தாமே செய்ய வைத்து
வேப்பிலா மரத்து விதந்து உறையும்
வேப்பிலை நாயகி காணும்
நாப்பிலா விசுவ ரத்தின நாயகனே
நானிலம் போற்ற வாக்கவே

**பண்டிதர்,**
**Dr.மா.கணநாதன்.**

### பெரிய சப்பறம் காண வாரீர்

மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பெரிய சப்பறம் 02.03.2023 வெள்ளோட்டம் காணவிருப்பதை றிந்து பேருவகை அடைகின்றேன். இவ்வாலயம் குறுகிய காலத்தில் பல திருப்பணிகளை முடிவுறுத்துவதில் தீனகர்த்தாபிரம்மஸ்ரீ கு.சரவணபவானந்த சர்மா அவர்களின் பங்களிப்பையும் சப்பற வடிவமைப்பாளர் சாரியார் விஸ்வப்பிரம்ம ச.விசஜரத்தினம் குழுவினரையும் சப்பறத்திற்கான நிதி அனுசரணை வழங்கிய பயகாரர் ஒப்பிலாமணி குடும்பத்தினரையும் இந்தச் சந்தர்ப்பத்தில் மனதார வாழ்த்துகின்றேன்.

**சண்முகம் சிவஞானம்**
**கலைமாடக்கோன்**
**காரை பாரிவள்ளல்.**



### காரைநகர் பிரதேச சபையின் தவிசாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

மடத்துக்கரை அம்மனின் திருவடியை வணங்கி
உள்ளம் உருகி உனைப்பாட வந்தேன் தாயே..
இலங்கை திருநாட்டில் காரைநகர் பதி மக்கள் உள்ளம்
உறைகின்ற எம்மவள் மடத்துக்கரை அம்மாவே...
நினைக்கும் போது எல்லாம் உன் திருவடி வணங்கி நிற்கின்றது மனம்
சப்பற வெள்ளோட்டம் இன்று அடியார்கள் உன் அழகை காண வந்தனரே...
சப்பற தன்னில் விடையேறி வருகிறாய் அம்மா...
உள்ளம் தன்னில் உலா வந்து மக்கள் இன்னல் போக்க வந்தாய் மகராசியே..
சித்தம் உன்னை அழகிய சப்பற தாயாய் காண வந்தோம்..
துன்பம் நீங்க உன்னை நாடி வருவோர்க்கு
மடத்துக்கரை அம்மாவாக நின்று வாழ்வுயர வழி செய்தாயே...
எல்லாம் வல்ல எங்கள் வலந்தலை மடத்துக்கரை
அம்மனே உம் ஆசி எப்போதும் எமக்குண்டு.
வெள்ளோட்ட நல்நாள் நாடும் ஊரும் சிறப்புற அமைய வாழ்த்துகிறேன்.

**க.பாலச்சந்திரன், தவிசாளர்.**

### பிரதேச சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

ஈழமணி திருநாட்டின் யாழ்.குடா நாட்டின் வடமேற்கே கடல் வளம் சூழப்பெற்ற சைவமும் தமிழும் தலைத்தோங்கும் சிவபூமியாம் காரையம்பதி தன்னில் விழாக்கோலம் பூண்டு எமக்கு அருள் மழை பொழியும் திருவருள் மிகு மடத்துக்கரை முத்துமாரியம்மன் அருளால் சப்பற வெள்ளோட்ட நிகழ்வு சீரும் சிறப்புமாக நடைபெற எல்லாம் வல்ல அம்பாளின் அருள் ஆசியினை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**கி.விஜயேஸ்வரன், செயலாளர், காரைநகர் பிரதேச சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஆணைக்குழுவில் மீண்டும் மகிந்த தேசப்பிரிய?



(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பதவிக்கு தான் விண்ணப்பம் அனுப்பியுள்ளதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் உள்ளிட்ட ஆணைக்குழுக்களுக்கான விண்ணப்பங்களை கோர அரசியலமைப்பு பேரவை அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினருக்கான விண்ணப்பங்களை ஏற்கும் திகதி கடந்த 15 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.

மஹிந்த தேசப்பிரிய முன்னதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# தாமதிக்காது தேர்தலை நடத்துங்கள் அமெரிக்க செனட் சபை வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழுவின் தலைவர் பொப் மெனண்டஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் குரலைப் பறிக்கும் எந்தவொரு முயற்சியும் மறுக்க முடியாத ஜனநாயக விரோதமானது என்றும், இலங்கையர்களின் உரிமைகளை நேரடியாக மீறும் செயலாகும் எனவும் அமெரிக்க செனட் சபையின் வெளிநாட்டு உறவுகள் குழு தமது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் காலதாமதமின்றி சுதந்திரமான மற்றும் நியாயமான உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை மெனண்டஸ் மேலும் வலியுறுத்தினார்.

இலங்கையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவது குறித்து ப்ளூம்பெர்க் வெளியிட்ட அறிக்கையைப் பகிர்ந்து கொண்டு மெனண்டஸ் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 24 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

தேர்தலுக்கான புதிய திகதி நாளை 3 ஆம் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைப்பு அறிவிப்பை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போராட்டங்கள் மூலம் அரசை மிரட்ட முடியாது எதிர்க்கட்சிகளுக்கு ரணில் எச்சரிக்கை

(கொழும்பு)

"நாட்டினதும் மக்களினதும் நலனைக் கருத்தில் கொண்டு தற்போதைய அரசு சீரான பாதையில் பயணிக்கின்றது. இதைக் குழப்பியடிக்க எதிர்க்கட்சியினர் முயற்சிக்கின்றனர். மக்களை அணிதிரட்டிப் போராட்டம் நடத்துவதன் மூலம் அரசை மிரட்ட முடியாது என்று எதிர்க்கட்சியினரிடம் தெரிவித்துக் கொள்கின்றேன்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"தேர்தலைப் பிற்போடுகின்ற சூழ்ச்சிக்கு எதிரான எதிர்ப்பு" என்ற தொனிப்பொருளில் கொழும்பில் அரசுக்கு எதிராக ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்த போராட்டம் தொடர்பிலும், அந்தப் போராட்டத்தை அடக்கப் பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் குறித்தும் கருத்து வெளியிடும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி ஆகிய எதிர்க்கட்சிகள் தத்தமது பலத்தைப் போட்டியிட்டுக் காட்டுவதற்காக மக்களைப் பலிக்கடாவாக்கப் பார்க்கின்றன.



நீதிமன்றம் ஊடாகத் தடை உத்தரவு பெறப்பட்ட பகுதிகளுக்குள் ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே.வி.பியினர் அத்துமீறிப் பிரவேசித்த போதே அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

நீதிமன்றத்தின் உத்தரவைக் கூட மீறி நடக்கும் ஜே.வி.பியினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றி எப்படி நாட்டை மீளக் கட்டியெழுப்பப் போகின்றனர்? ஜே.வி.பியினரின் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் அவர்களின் வீர வசனங்களைக் கேட்பதற்கு மக்கள் அணி திரள்வது வழமை. ஆனால், தேர்தல் பெறுபேறுகளின் போது ஜே.வி.பியினரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதும் வழமை" என அவர் தெரிவித்தார். (நி)

# வலுவடையும் ரூபாய் பெறுமதி

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது.

வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின்படி, டொலரின் கொள் விலை 351.72 ரூபாவாகவும் விற்பனை விலை 362.95 ரூபாவாகவும் நேற்று காணப்பட்டது.

கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் முதலீட்டாளர்களிடத்தில் நம்பிக்கை அதிகரிப்பதன் மூலம் ரூபாவின் மதிப்பு உயர்வடைந்துள்ளது என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 200 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 160 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 300 | 350 |
| தக்காளி | 120 | 100 | 120 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 140-200 | 220 |
| பூசணி | 80 | 80 | 60 | 70 |
| புடோல் | 200 | 200 | 180 | 180 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 130 | 150 |
| பாகற்காய் | 550 | 450 | 500 | 500 |
| வெண்டக்காய் | 350 | 300 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 150 |
| பயற்றங்காய் | 350 | 300 | 400 | 350 |
| லீக்ஸ் | 260 | 240 | 250 | 200 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 280 |
| கறிமிளகாய் | 550 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1800 | 2000 | 1500 | 1600 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 400 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 150 | 160 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 250 | 280 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 160 | 250 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 150 | 100 |


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## பெறுகை அறிவித்தல்

**2023 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2023 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை (Cleaning Service) காவற்கடமை, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவையும் நாளாந்த பணிக்காலமும் | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை (09 மணி.) | 03 | 365 நாட்கள் | 21,000.00 | 11.06.2023 |
| | வெளிக்களத் தொழிலாளி சேவை (09 மணி.) | 02 | | | |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை (08 மணி.) | 10 | 365 நாட்கள் | 32,000.00 | 11.06.2023 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை (12 மணி.) | 04 | 365 நாட்கள் | 19,000.00 | 11.06.2023 |

1) சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவையை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்.மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 02.03.2023 தொடக்கம் 15.03.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3,000.00 ஐ செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
4) பெறுகை ஆவணங்கள் **15.03.2023 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

(C-6084)

**02.03.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மையின் மிக நெருங்கிய நண்பன் அச்சம். வாய்மையின் மிக நெருங்கிய நண்பன் அச்சமின்மை. - நேதாஜி

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாறுவேடம் தாங்கி வீட்டுக்கதவை தட்டுவர்...

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எங்கும் மோசடிகள் மலிந்து போயுள்ளன.

களவு, கொள்ளை என்பவற்றுக்கு அப்பால், பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பலொன்று ஒழித்திரிகின்றது.

ஆம், தொலைபேசி அழைப்புகள் மூலம் மக்களுடன் தொடர்பு கொண்டு நாங்கள் உங்களுக்கு இலட்சக்கணக்கில் உதவி செய்யவுள்ளோம். நீங்கள் பத்தாயிரம் ரூபாயை எமக்கு உடனடியாக அனுப்பி வையுங்கள் என்று ஆசை வார்த்தை கூற, அதனை நம்பி, இருந்த காசையெல்லாம் சேர்த்து பத்தாயிரம் ரூபாயை அனுப்பிவிட, அவ்வளவுதான் குறித்த தொலைபேசி அதனோடு நிறுத்தப்பட்டு விடும்.

அதன் பிறகே தாம் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்கின்றனர்.

என்ன செய்வது இருந்த பணத்தை இழந்தது மட்டுமன்றி, அதனை வெளியில் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் வேதனைப்படுகின்றவர்களின் நிலைமை பரிதாபத்துக்குரியது.

இவை ஒருபுறம் நடக்க, இப்போது தாம் கிராம உத்தியோகத்தர் என்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் என்றும் கூறிக்கொண்டு, உங்களின் பெயரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்தால் அரசாங்கம் அந்த வங்கிக் கணக்குக்கு மாதாமாதம் பணம் அனுப்பும் என்று கூறி, வங்கிக் கணக்கை ஆரம்பிக்க ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாயைத் தாருங்கள் எனக் கேட்கின்ற நாடகம் நடந்தாகின்றது.

அதனை நம்பி, இருந்த பணத்தைக் கொடுத்துவிட, அதன் பின்னர்தான் வந்தவர் போலியானவர் என்பதும் தாம் பணத்தைக் கொடுத்து ஏமாந்து விட்டதையும் அறிய முடிகின்றது.

இவ்வாறு பல வழிகளால் பொதுமக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கின்ற கும்பலொன்று கனகச்சிதமாகச் செயற்படுகின்றது.

இருந்தும் பொதுமக்கள் விழிப்பற்றவர்களாக – இத்தகைய சம்பவங்கள் சமூகத்தில் நடப்பதை அறியாதவர்களாக ஏமாந்து போகின்றனர்.

இதிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவது அனைவரதும் கடமையாகும்.

எனவே நாளுக்கு நாள் நடக்கின்ற ஏமாற்றுச் சம்பவங்களை மறைப்புச் செய்யாமல் அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

இது விடயத்தில் அந்தந்த பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன்மூலம் மோசடிக் கும்பலில் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

கூடவே ஊடகங்களும் இத்தகைய மோசடிச் சம்பவங்களை வெளிப்படுத்தி, மக்களை உசார்ப்படுத்துவது அவசியமானதாகும்.

### சர்வதேச வர்த்தகக் கண்காட்சி

# சீருடையுடன் வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்

(யாழ்ப்பாணம்)

நாளை ஆரம்பமாகவுள்ள சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் சீருடையுடன் வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கு அனுமதி இலவசம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழில் "வடக்கின் நுழைவாயில்" எனும் தொனிப்பொருளில் 13 ஆவது தடவையாக சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளதாக யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் குரைட்ணம் விக்னேஸ் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த சர்வதேச கண்காட்சி ஆனது 13 ஆவது தடவையாகவும் கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களையும் இணைத்து யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தவுள்ளோம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் தொழில் நுட்பரீதியில் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

பல வருடகாலமாக வடக்கின் கைத்தொழில் துறை வளர்ச்சி மற்றும் சந்தைவாய்ப்பில் இருந்த பாரிய இடைவெளிகள் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 ஆயிரம் பேர் வந்திருக்கிறார்கள் சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

பாடசாலை சீருடையுடன் வருகைதரும் மாணவர்கள் குறித்த கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,104)

## ஈஸ்டர் தாக்குதல் வழக்கு; ஜனாதிபதி ரணில் விடுவிப்பு

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதலை தடுக்க தவறியதன் காரணமாக தனக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, அவ்வழக்கிலிருந்து விடுவிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட 108 பேரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி மகேஷ டி சில்வா முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### அதிகளவு போதை மாத்திரை

# பேராதனை பல்கலை மாணவி உயிரிழப்பு

அதிகளவு போதை மாத்திரைகளால் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் இறுதியாண்டு மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மாணவி அளவுக்கு அதிகமாக போதை மாத்திரைகளை உட்கொண்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்தது.

குறித்த மாணவி பல்கலைக்கழக விடுதியில் உள்ள அறைக்குள் சுகவீனமடைந்த நிலையில் அவரது நண்பர்களால் பேராதனை போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டார். மேலும் அவர் மன அழுத்தத்திற்கு சிகிச்சை பெற்று வந்ததும் தெரியவந்தது. (ம-7)

# மோட்டார் குண்டு அராலியில் மீட்பு

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி வள்ளியம்மை பாடசாலைக்கு அருகாமையில் உள்ள வீட்டுக் காணி ஒன்றில் துருப்பிடித்த நிலையிலான மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த வீடானது சில வருடங்களுக்கு முன்னர் அராலி மேற்கு, வட்டுக்கோட்டை ஜே/160 கிராம உத்தியோகத்தர் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்நிலையில் குறித்த காணியின் உரிமையாளரால் குண்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றத்தின் அனுமதியின் பின்னர் குறித்த குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

## தொடர்ச்சியாக மோட்டர் திருடி வந்தவர் கைது

(மன்னார்)

மன்னார் - நானாட்டான் பிரதேசத்தில் பல வீடுகளில் தொடர்ச்சியாக பெறுமதி மிக்க நீர் இறைக்கும் இயந்திரம் திருடி வந்த நபரை பொலிஸாரின் உதவியுடன் நேற்று புதன்கிழமை பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் சிலவற்றில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டு வந்துள்ளது.

இந்த நிலையில் சந்தேகத்தில் அருவி ஆற்றங்கரையில் உள்ள தோட்டம்செய்யும்வீடு வளவை சோதனை செய்த போது திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உடனடியாக முருங்கன் பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த முருங்கன் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். கைது செய்யப்பட்ட நபர் இராசமடு அருவி ஆற்றங்கரையில் வசிக்கும் 39 வயது மதிக்கத்தக்க நபர் எனவும் குறித்த நபரிடம் இருந்து மூன்று நீர் இறைக்கும் இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-285)

## முள்ளியவளை சந்தைத் தொகுதியின் கட்டட வேலைகள் ஆரம்பம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு முள்ளியவளை சந்தையில் கடைத் தொகுதி வேலைகள் நடைபெற்று வருவதாக கரைதுறை பற்று பிரதேச சபை தவிசாளர் க. விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது உலக வங்கியின் 22.5 மில்லியன் நிதி உதவியில் இக் கடைத் தொகுதி வேலைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த ஆண்டின் 9 ஆம் மாதத்தில் இவ் வேலைகள் தொடங்கப்பட்டன.

1951 ஆம் ஆண்டு முள்ளியவளைச் சந்தை அமைக்கப்பட்டிருந்தது. கடைத் தொகுதி வேலைகள் தொடங்கப்பட்ட போது தனி நபர் ஒருவர் முல்லைத்தீவு நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து இருந்தார்.

தற்போது பிரதேச சபை கடைத் தொகுதி வேலைகளை மேற்கொள்ளலாம் என தீர்ப்பு வெளியாகி இருந்தது. தற்போது கடைத் தொகுதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன.

இக்கடைத் தொகுதிகள் இயங்கும் போது முள்ளியவளை சந்தைச் சூழல் ஒரு உப நகரத்திற்குரிய வளர்ச்சி அடையும். மக்கள் பெரும் பயனடைவார்கள் என்வும் பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். (4-6-350)

# விளையாட்டுப் போட்டி

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறவுள்ளது. அதிபர் திருமதி. இ.ரவீந்திரநாதன் தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. கமலராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு

# மருத்துவ, வங்கி சேவைகள் நேற்று முடங்கின

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடளாவிய ரீதியாக நேற்று இடம்பெற்ற பணிப்பகிஸ்கரிப்பு போராட்டம் நேற்று வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டது.**






இதனால் பல்வேறு சேவைகள் ஸ்தம்பித மடைந்திருந்தன.

நாட்டில் ஒரு இலட்சம் ரூபாவிற்கும் அதிக வருமானம் பெறும் தொழில் வல்லுநர்களிடமிருந்து 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரி அறவிடப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் புதிய வரித்திருத்தத்தை மறுசீரமைப்பிற்கு உட்படுத்துமாறு கோரியும் தொழிற் சங்க கட்டமைப்புக்களால் நாடளாவிய ரீதியில் குறித்த் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டது.

போராட்டம் காரணமாக மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவுகளைத் தவிர்ந்த ஏனைய சேவைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், சிகிச்சைகளிற்காக சென்ற பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்தித்திருந்தனர்.

இதேவேளை குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பிரதான வங்கிகளின் செயற் பாடுகளும் தடைப்பட்டிருந்தது. இதனால் தூர இடங்களில் இருந்து வங்கிச்சேவைகளுக்காக வருகைதந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன்திரும்பிச் சென்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது.(4-6-30-33-299-316)

# திருட்டில் ஈடுபட்டவர் கைது திருடிய பொருட்களும் மீட்பு




(அராலி)

பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்திகை பகுதியில் களவாடப்பட்ட நகை மற்றும் தொலைபேசி என்பன மீட்கப்பட்டதுடன் 32 வயதுடைய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்துமேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2022 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் இந்த களவுச் சம்பவம் இடம் பெற்றது. இதன்போது 12 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் கையடக்க தொலைபேசி ஒன்றும் களவாடப்பட்டன. இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாடானது காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன்போது சந்தேகநபர் காங்கேசன் துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணையின்போது, அவர் திருடிய நகைகளை வவுனியாவில் உள்ள இரண்டு நகைக்கடைகளில் விற்பனை செய்தது தெரியவந்தது. அத்துடன் தொலைபேசியும் வவுனியாவில் விற்பனை செய்யப்பட்டு இருந்த நிலையில் தொலைபேசி மூலமாக களவு வெளிப்பட்டது. இந்நிலையில் கடையில் விற்கப்பட்டு உருக்கிய நிலையில் காணப்பட்ட நகையும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில் அவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)

# பாரம்பரிய நெல் இன அறுவடை மன்னாரில் முன்னெடுப்பு



(மன்னார்)

அழிந்து வரும் பாரம்பரிய நெல் இனங்களை பாதுகாக்கும் முகமாக மன்னார் மெசிடோ நிறுவனத்தினால் கடந்த வருட இறுதியில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு தொகை பாரம்பரிய நெல் விதைகள் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நெற்செய்கையின் அறுவடைநேற்று புதன்கிழமை காத்தான்குளம் பகுதியில் மெசிடோ நிறுவன ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது.

நஞ்சற்ற உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக முற்றிலும் இயற்கை பசளைகளை பயன்படுத்தி இயற்கையான முறையை பயிர்செய்யப்பட்ட சுவடை என அழைக்கப் படும் பாரம்பரிய மூன்று மாத கால நெல் காத்தான்குள விவசாயிகளால் விதைப்பு செய்யப்பட்டிருந்த நிலையில் மேற்படி அறுவடை பாரம்பரிய முறையில் இடம்பெற்றது. எந்த ஒரு இயந்திர சாதனங்களையும் பயன்படுத்தாது பாரம்பரிய முறையில் விதைப்பு மேற்கொண்டு அருவி வெட்டி சூடு மிதித்து அனைத்தும் இயற்கையான பாரம்பரிய முறைப்படி இடம் பெற்றது.

ஏனைய செய்கைகளை விட சுவடை இன நெல் மூன்று மாத காலப்பகுதிக்குள் அறுவடைக்கு தயாராகும் என்பதுடன் தற்போது மூடை 10000 ரூபாய்க்கு அதிக மான விலைக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. (4-6-285)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: சூரி 2 செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:சொந்தத்தொழில்<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13368 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா:சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 5' 1"<br>தகைமை/தொழில்:உயர்தரம்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/13424 |
| பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா:சூரி 6 செவ் 2 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:Civil Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி காரைநகர் விரும்பத் தக்கது.<br>தொ.இ: B/13369 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருக சீரிடம் 3<br>கி.பா:10 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:Doctor<br>எதிர்பார்ப்பு:வைத்தியர் பொறியியலாளர்<br>தொ.இ:G/13432 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா:8 ½ சூரி, செவ் 2 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: QS<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.<br>தொ.இ: B/13371 | பிறப்பு:1997 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 11 சூரி 4 செவ் 6 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்:College of Technology Jaffna (Accounts)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/13433 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 22 ¼ சூரி 10 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: உயர்தரம் (ஆங்கிலமொழி மூலம்) முகாமையாளர் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13372 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா:26 ¼ சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 4' 5"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/13434 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணெண்...

அத்துடன், தொழிற்துறைக்குப் பயன்படுத்தும் மண்ணெண்ணெய் விலை 134 ரூபாயினால் (புதிய விலை 330 ரூபாய்) குறைக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## குளத்தில் மூழ்கிய...

டுள்ளது.

குறித்த குளத்தில் நீராடச் சென்றவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கிளாலி பகுதியை சேர்ந்த 52 வயதுடைய மரியான் பீரிஸ் என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7,100)

## கோப்பாயில்...

பவரே உயரிழந்தவராவார்.

கடந்த 23ஆம் திகதி மானிப்பாயில் இருந்து கைதடி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கோப்பாய் கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமையில், முன்பாக சென்ற கார் திடீரென நிறுத்தப்பட்டதன் காரணமாக மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் காரின் பின் பகுதியுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டு மயக்கம் அடைந்தார். மயக்கமடைந்தவர் மீட்கப்பட்டு கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர்

மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம்தொடர்பில்யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் நேற்று விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் கையளிக்க உத்தரவிட்டார்.

இவ் விபத்தை ஏற்படுத்திய கார் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரை பொலிஸார் தேடி வருகின்றனர். (ம-7,60)

## புதிய முதல்வர்...

போதும், அதை நிறைவேற்ற முடியாமல் பதவி விலகியிருந்தார்.

இந்த நிலையில் புதிய முதல்வர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியாகவுள்ளது.

திட்டமிட்டபடி உள்ளூராட்சி சபைகள் மார்ச் 19ஆம் திகதி கலைக்கப்பட்டால், அதுவரை புதிய முதல்வர் பதவியில் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## உள்ளூராட்சி...

நாள் விவாதம் நடத்துவதற்கு குறித்த குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்ற விவகாரக் குழுவிடம் குறித்த இரண்டு நாள் விவாதத்தை கோரியிருந்தார்.

அதேசமயம், பரந்துபட்ட விவாதம் நடத்தப்பட வேண்டியது அவசியம் என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காலிமுகத்திடல்...

அத்துடன் காலி முகத்திடலில் இடம்பெற்ற ஆர்பாட்டத்தின் பிரதான சூத்திரதாரி தொடர்பிலான முழுமையான விபரத்தை தாம் அறிவதாகவும் குறிப்பிட்ட அவர், தான் அதனை பகிரங்கப்படுத்த மாட்டேன் எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## இந்தியாவில்...

சுமார் 8 ரிக்டர் அளவுகோலில் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டால் அது கொழும்பின் பல முக்கிய பிரதேசங்களை பாதிக்கும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.

பொதுவாக நிலநடுக்கங்கள் எப்போது ஏற்படும் என்று கணிக்க முடியாது. ஆனால் அவை ஏற்படக்கூடிய பகுதிகள் மற்றும் ஏற்படக்கூடிய விளைவுகளை அடையாளம் காண முடியும் என்று பேராசிரியர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## தொழிற்சங்கங்...

தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்று அடையாள வேலை நிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த நிலையில், பெற்றோலியம், மின்சக்தி, துறைமுகம், ரயில்வே, ஆசிரியர் மற்றும் தபால் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் உணவு இடைவேளையின்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அவர்களுக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை 7 மணி முதல் இன்று காலை 7 மணி வரை மெதுவாக வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ள துறைமுக தொழிற்சங்கங்கள், நேற்று பகல் கொழும்பு துறைமுக நுழைவாயிலுக்கு அருகிலுள்ள கான் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக ஒன்றுகூடி எதிர்ப்பில் ஈடுபட்டன.

நியாயமற்ற வரிக்கொள்கையை விரைவாக மாற்றுமாறு அவர்கள் இதன் போது கோரிக்கை விடுத்தனர். கான் மணிக்கூட்டு கோபுரத்திற்கு முன்பாக வீதியை மறித்து சுமார் ஒரு மணித்தியாலம் துறைமுக தொழிற்சங்கத்தினர் இந்த எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

துறைமுக தொழிற்சங்கங்களின் ஐக்கிய கூட்டமைப்பினர் திருகோணமலை சீனன்குடா துறைமுக சந்தியில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொழில்முறை தொழிற்சங்க ஒன்றியத்தின் பங்குதாரரான இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் நேற்று ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் நேற்று கம்பஹா ரயில் நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

குருநாகல் மாவட்ட வங்கி ஊழியர்களும் நேற்று ஒருநாள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததோடு, கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

காலி, மாத்தறை, அநுராதபுரம் மாவட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருந்தன. நாட்டில்பல பகுதிகளிலும் நேற்று வங்கி சேவைகள் முடங்கியிருந்தன.

புத்தளம், மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச வங்கிகள் முழுமையாக நேற்று மூடப்பட்டிருந்தன.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்களும் சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்தின் ஊழியர்களும் நேற்று எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நேற்று முற்பகல் அரச வைத்தியசாலை சேவைகள் பாதிக்கப்பட்டன. கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் மாத்திரமே அளிக்கப்பட்டன. தேசிய வைத்தியசாலையின் தாதியர்கள் நேற்று பகல் எதிர்ப்பிலும் ஈடுபட்டனர்.

சுகாதார தொழிற்சங்கங்கள் ஏற்பாடு செய்த மற்றுமொரு எதிர்ப்பு நடவடிக்கை தேசிய கண் வைத்தியசாலைக்கு முன்பாக நடத்தப்பட்டது. சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையிலும் குருநாகல் போதனா வைத்தியசாலையிலும் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கம்பளை ஆதார வைத்தியசாலையின் தாதியர்கள், வைத்தியர்கள், ஊழியர்கள் ஒன்றிணைந்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கம்பளை ஆதார வைத்தியசாலை வளாகத்திலிருந்து கம்பளை நாவலப்பிட்டி பிரதான வீதி வரை பேரணியாக சென்றவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

மாத்தளை, புத்தளம், திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களின் வைத்தியசாலைகளில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக வைத் தியசாலை சேவைகள் பாதிக்கப்பட்டன.

பாடசாலை ஆசிரியர்கள் கறுப்பு ஆடையணிந்து நேற்று பணிக்கு சமுகமளித்திருந்தனர். இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து கொட்டாவையில் நேற்று மாலை எதிர்ப்பில் ஈடுபட்டனர். (ம-7)

(மற்றொரு செய்தி உள்ளே)


ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 01/03/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1501 — வெற்றி இலக்கங்கள்: மிதுனம் 2 0 9 1 8 9 — தேசிய லொத்தர் சபை

தன நிதானய — திகதி 2023.03.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1076 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 35 44 51 76

கொவிசெத — திகதி 2023.03.01 — சீட்டிழுப்பு இலக்கம் 3288 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 06 27 42 69 — தேசிய லொத்தர் சபை

மெகா பவர் — திகதி 01/03/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1394 — W 05 — 11 51 62 70

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2023.03.01 — சீட்டிழுப்பு இலக்கம் 355 — மேஷம் 13 31 45 58 மேஷம் — தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத — திகதி 2023/03/01 — சீட்டிழுப்பு இலக்கம் 5046 — D 0 2 8 5 4 2 — தேசிய லொத்தர் சபை

கப்றுக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — T (32) 21 24 36 50 — சீட்டிழுப்பு வாரம் 1197 — இள நீலம் — திகதி 2023.03.01 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 309,924,984.20 — DLB — Web: www.dlb.lk

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2021 — நிறம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.03.01 — தினம் புதன்கிழமை — E 09 25 62 74 — வெல்லப்படாத மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,529,720/- — DLB

ஜயோதா Jayoda — சீட்டிழுப்பு வாரம் 1901 — சீட்டிழுப்பு திகதி 2023-03-01 — வெற்றி இலக்கங்கள் 12 21 24 47 J — எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 40,535,449.20 — DLB DEVELOPMENT LOTTERIES — தொ. பே.: 0112 333 546/47 — Web: www.dlb.lk

சனிதா — புதன்கிழமை — சீட்டிழுப்பு திகதி: 2023.03.01 — சீட்டிழுப்பு இல: 4182 — வர்ணம்: ஊதா — வெல்லப்படாத மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,587,920/- — வெற்றி இலக்கங்கள் 16 35 62 68 C — DLB

ராசி — திகதி 2023-03-01 — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/- — வெற்றி வாரம் 3733 — வர்ணம் பச்சை — வெற்றி இலக்கங்கள் 13 14 15 25 — வெல்லப்படாத மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,074,700/- — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2021 — நிறம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.03.01 — தினம் புதன்கிழமை — E 09 25 62 74 — வெல்லப்படாத மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,529,720/- — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 km தூரம்
- புத்தூர் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காபற் வீதியில் இருந்து இரண்டாவது காணி
- அரச தனியார் பேருந்துகள் செல்லும் வீதி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14770)

**076 435 0614, 077 638 5683**



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14750)

**076 825 7716** (ஆகாஸ்)



# உடனடி வேலை வாய்ப்புக்கள்



**EXECUTIVE OFFICER**

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6089)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6089)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com



அனேகரின் வேண்டுகோள்களுக்கு இணங்க



# திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளியில் சரஸ்வதி கல்வி நிலையம்

**Saraswathi Tuition Center**
**528, Palaly Road, Thirunelvely**

**புதிதாகத் தரம் 1 பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் 06.03.2023 திங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பம்**

- சுற்றாடல், தமிழ், ஆங்கிலம், கணிதம், அழகியல், ஆக்கத்திறன், தகவல் தொழில்நுட்பம், சமயம் உட்பட அனைத்துப் பாடங்களும் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் தினங்களில் நடைபெறும்.
- தரம் வாய்ந்த ஆசிரியர்கள் மற்றும் நிபுணர்களால் சிறார்களின் கற்றல் திறன்களை விருத்தியாக்கும் பன்முக நுண்மதி சார்ந்த புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவான கற்றல் - கற்பித்தல்.
- வகுப்பு ரீதியாக, குழுவாக, தனியாக மாணவர்களின் இயல்புகளுக்கு ஏற்ப மகிழ்ச்சிகரமான கற்றல்.
- நூல்களை ஆர்வத்துடன் வாசிப்பதற்கான விசேட பயில்வுகள். (14757)

**T.P - 076 848 5213** பணிப்பாளர்


# சாவகச்சேரியில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மடத்தடிப் பகுதியில் தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி மடத்தடியைச் சேர்ந்த 67 வயதான சி.தங்கராசா என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதியவரது மனைவி மற்றும் பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)


# புதிய பிரிவுகள் ஆரம்பம் 04.03.2023

**வங்கியியல் கற்கைநெறிகள்**
**Banking Courses**
**IABF & DABF**
(Tamil & English Medium)
Qualification:- G.C.E O/L 6 Passes with 5 Credits including Maths.

**கணக்காளர் கற்கைநெறிகள்**
**Chartered Accounting Courses**
Business level - 1, II
(Tamil & English Medium)
Qualification:- G.C.E A/L 3 Passes.

**தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு**
**aat (Sri Lanka)**
**AA1, AA2, AA3)**
Qualification:- G.C.E O/L 6 Passes
Medium - Tamil & English

**G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்**

**Certificate Course in English**
21 Batches have successfully Completed the Course

Further Details: **Jaffna College Undergraduate Dept.**
464, Hospital Road, Jaffna.
021 222 3382, 021 222 9149
077 440 5917 (C-6078)



# கணக்காளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் தேவை.
Quick Book , Excel தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-6087)

**021 222 4550**
**077 725 9605**


# 31ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு
25
04
1958

இறப்பு
29
01
2023

**திருவாளர் இராஜேந்திரம் பாலசுப்பிரமணியம் (மோகன்)**

(முன்னாள் சாரதி - தனியார் போக்குவரத்துச் சங்கம் 751 பருத்தித்துறை, 781 மண்டைதீவு)

அன்னை தந்தைக்கு முத்தான மூத்த புத்திரனாக!
அழகான சந்தானத்தின் எழில் கொஞ்சும் முன்னவனாக!
ஆடம்பரம் இல்லாத அடக்கமான இல்வாழ்வில் – இதமான கணவனாக!
ஆறிவொளிர்ந்திடும் மழலைச் செல்வங்களின்
பண்பான, பரிவான, பாசத்தோடு வாழ்ந்த தந்தையாக
இளகிய இதயமும், தயவான இயல்பும் – தன் சொந்தமான
பண்பாடு தோய்ந்த நெஞ்சமே! புண்பாடில்லாப் புண்ணியனே!
எமைக்கசிந்து கண்ணீர் மல்கவைத்து
காற்றாகிப் பறந்தாயே எம் பகலவனே!
ஆற்றொணாத்துயர் தனுக்கு ஆறுதலைத்தாராயோ?
நின்நினைவே எம்தனுக்கு...

2ம் வட்டாரம், மண்டைதீவு,
V.H லேன், இருபாலை, கோப்பாய் (14768)

குடும்பத்தினர்


யாழ் நகரில் நடைபெறும் சர்வதேச வர்த்தக கண்காட்சியை முன்னிட்டு ஊஷா ஏஜென்சி வழங்கும் மாபெரும் விலைக் கழிவுடன்......






**Zoje Sewing Machine**
**Model : MCZJ8500G**

# மூன்று நாட்கள் மட்டும்

(14769)

**Usha Agency**
**No:62/32 Stanley Road, Jaffna.**
**T.P No:021 222 6982**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.